## பத்திரிகை வெளியீடு

கொழும்பு, 25 பெப்ரவரி 2021

Nestlé
Good food, Good life

**சிறுவர்கள் தொலைக்கல்வி அடிப்படையில் கற்பதற்கும், உடற்பயிற்சிகளை முன்னெடுப்பதற்கும் உதவும் வகையில் 10,000 சிறுவர்களுக்கு ரூபா 10 மில்லியன் பெறுமதியான உதவிகளை வழங்க *மைலோ* முன்வந்துள்ளது**

தற்போது பரவி வருகின்ற தொற்றுநோய் காரணமாக அனேகமாக எல்லாச் சிறுவர்களும் தமது வீடுகளுக்குள்ளேயே முடங்கி, வீடுகளுக்கு வெளியில் நேரத்தைச் செலவிடுவது மட்டுப்படுத்தப்பட்டுள்ள ஒரு சூழ்நிலையில், அவர்கள் தொலைக்கல்வி அடிப்படையில் கற்பதற்கும், உடற்பயிற்சிகளை முன்னெடுப்பதற்கும் உதவும் வகையில், மடிகணினிகள், டெப் சாதனங்கள், றீலோட்கள், ஸ்கூட்டர்கள், சைக்கிள்கள் மற்றும் பலவற்றுடன் மைலோ தனது அண்மைய ஊக்குவிப்புப் பிரச்சாரத்தின் மூலமாக 10,000 சிறுவர்களுக்கு ரூபா 10 மில்லியன் பெறுமதியான உதவிகளை வழங்க முன்வந்துள்ளது. 2021 பெப்ரவரி 18 முதல் 2021 ஏப்ரல் 18 வரையான காலப்பகுதியில் குலுக்கல் சீட்டிழுப்புக்கள் மூலமாக வாரந்தோறும் 1,000 சிறுவர்களுக்கு இந்த வர்த்தகநாமத்தின் வெகுமதிகள் கிடைக்கப்பெறவுள்ளன.

*‘‘மைலோ வர்த்தகநாமமானது எமது நுகர்வோரை ஊட்டச்சத்துடன் வளப்படுத்தி வாழ்க்கையில் மேலும் முன்னேறுவதற்கு இடமளித்து வருகின்றது. உடற்பயிற்சிகளை முன்னெடுப்பதை ஆதரித்தும், ஊக்குவித்தும் ஆரோக்கியமான ஒரு வாழ்க்கைமுறையை அவர்கள் முன்னெடுப்பதற்கு உதவுவது இதில் முக்கியமான ஒரு அங்கமாகக் காணப்பட்டாலும், இந்த ஆண்டில் மற்றுமொரு படி மேலே செல்வதற்கு நாம் விரும்பினோம். தொலைக்கல்வி மற்றும் ஒன்லைன் கற்றல் வகுப்புக்கள் தொடர்பில் எத்தனையோ குடும்பங்களின் இன்னல்களை நாம் அறியப்பெற்றோம். குறிப்பாக ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் உள்ள குடும்பங்களில் போதுமான சாதனங்கள் அல்லது தரவு இல்லாமை காரணமாக அவர்கள் பல இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். மேலும், தமது பிள்ளைகள் வீட்டிற்கு வெளியே சென்று விளையாட முடியாமை மற்றும் உடற்பயிற்சிகளை மேற்கொள்ளாமை தொடர்பில் பெற்றோர் கவலை கொண்டுள்ளதையும் நாம் அறிந்துள்ளோம். எனவே ஒரு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படுகின்ற இந்த ஊக்குவிப்பு பிரச்சாரம், பிள்ளைகள் தமது வாழ்வில் மேலும் முன்னேற உதவ பெற்றோருக்கு தேவைப்படுகின்ற வளங்களை வழங்கி அவர்களுக்கு உதவ நாம் மேற்கொண்டுள்ள தனித்துவமான ஒரு அணுகுமுறையாகும்,’’* என்று மைலோ உற்பத்திப்பிரிவின் சந்தைப்படுத்தல் முகாமையாளரான மொஹமட் அலி அவர்கள் குறிப்பிட்டார்.

முதலாவது வாரத்தின் வெற்றியாளர்களில் ஒருவரான அனுராதபுரத்தைச் சேர்ந்த தினோதி திசாநாயக்க அவர்கள் தான் வென்றுள்ள மடிகணினி தனது குடும்பத்தில் புதியதொரு உலகிற்கு வழிகோலியுள்ளதாகக் குறிப்பிட்டார். *‘‘நானும் என் சகோதரியும் எங்கள் தாயின் மொபைல் தொலைபேசியில் ஒன்லைன் மூலமாக வகுப்புகளில் இணைந்து கொள்வதுடன், சில சமயங்களில் ஒரே நேரத்தில் இருவரும் வகுப்புகளில் இணைந்துகொள்ள வேண்டியும் உள்ளது. வகுப்புகளை சிறப்பாக முன்னெடுத்து, எங்கள் பாடசாலை வேலைகளை எளிதாக முடிக்க உதவும் ஒரு சாதனத்தை வெல்வோம் என்ற நம்பிக்கையில் போட்டியில் பங்கேற்றோம். நெஸ்லே மைலோவுக்கு மிக்க நன்றி!’’* என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

பிலியந்தலையைச் சேர்ந்த சேதிக மெதுனிஜ அவர்கள் சிறுவர்களுக்கான ஸ்கூட்டரை வென்றுள்ளதுடன், தினந்தோறும் குறைந்தபட்சம் அரை மணி நேரமாவது உடற்பயிற்சியை மேற்கொள்ள தனது மகனுக்கும், மகளுக்கும் அது உதவுமென சேதிகவின் தந்தை குறிப்பிட்டார். *‘‘எங்கள் பிள்ளைகளின் பொழுதுபோக்குக்கு உதவுவது மட்டுமல்லாது உடற்பயிற்சிகளுக்கும் உதவும் ஒன்றை வென்றதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். நீண்ட நாட்களாக அவர்கள் வீட்டிற்குள்ளேயே முடங்கிக் கிடப்பது என்பது இலேசான ஒரு விடயமல்ல, எனவே இது மிகவும் பாராட்டத்தக்கது,’’* என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

*Milo* RTD (Ready-to-drink) பானத்தை தங்களது பிள்ளை அருந்தி மகிழும் காட்சியைக் கொண்ட புகைப்படத்தை, பெற்றோர் தமது பெயர், தொலைபேசி இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியைக் குறிப்பிட்டு, 077768007 என்ற இலக்கத்திற்கு வைபர் அல்லது

வாட்ஸ்அப் ஊடாகவோ, அல்லது தபால் பெட்டி 189, கொழும்பு என்ற முகவரிக்கு அஞ்சல் மூலமாகவோ, அல்லது @MiloSriLanka முகநூல் பக்கத்திற்கு நேரடியாக அனுப்பி வைப்பதன் மூலமாகவோ இந்த ஊக்குவிப்புப் பிரச்சாரத்தில் பங்கேற்கும் தகமையைப் பெற்றுக்கொள்ள முடியும். இப்போட்டியின் விதிமுறைகளுக்கு அமைவாக குலுக்கல் சீட்டிழுப்பு அடிப்படையில் வாரந்தோறும் 1,000 வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, மடிகணினிகள், டெப் சாதனங்கள், றீலோட்கள், ஸ்கூட்டர்கள், சைக்கிள்கள், ஸ்கேட்போர்டுகள், கூடைப்பந்துக்கள், உதைபந்துகள், கயிறடித்தல் கயிறுகள், ஹெட்செட்டுகள் அல்லது பாடசாலைப் புத்தகப்பைகளை வெல்லவுள்ளனர். இது தொடர்பான மேலதிக தகவல் விபரங்களை @MiloSriLanka முகநூல் பக்கத்தின் மூலமாக அறிந்து கொள்ள முடியும்.

---